## தமிழ்நாட்டில் நடைபெறும் ஆட்சி, மகளிருக்கான ஆட்சி!

# மகளிர் நலன் காக்கும் திட்டங்களே, அதற்கு சாட்சி!

## வேலூர் மாவட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

வேலூர், டிச.9 -

**வேலூர் மாவட்ட - அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாட்டில் நடைபெறும் ஆட்சி, மகளிருக்கான ஆட்சி, மகளிர் நலன் காக்கும் திட்டங்களே, அதற்கு சாட்சி" என்று குறிப்பிட்டார்.**

வேலூர் மாவட்டத்தில், அரசுப் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில், அடிக்கல் நாட்டும் விழா, நிறைவுபெற்ற திட்டங்கள் திறப்பு விழா, கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்குதல் மற்றும் பயனாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவற்றில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில், ரூ.75.95 கோடி மதிப்பிலான 17 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.14.28 கோடி மதிப்பில் பணி நிறைவுபெற்ற 36 திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 602 பேருக்கு ரூ.7.40 கோடி மதிப்பில் வங்கிக்கடன் இணைப்பு, 440 மகளிருக்கு, ரூ.38.26 கோடி மதிப்பில் சமுதாய முதலீட்டு நிதி மற்றும் ஆதார நிதி, 169 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.76.83 லட்சம் மதிப்பில் மூன்று சக்கர வாகனம் மற்றும் உபகரணங்கள் என, மொத்தம் 4,784 பயனாளிகளுக்கு, ரூ.130.92 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களை வழங்கி பயனாளர்களை வாழ்த்திப் பேசினார்.

**அப்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசியதாவது :-**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அதனை சிறப்பிக்கும் வகையில், ஊராட்சிகள் தோறும் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்' வழங்குகின்ற இந்த சிறப்பான நிகழ்ச்சி மற்றும் பல்வேறு நலத்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

இந்தச் சிறப்புக்குரிய விழாவில் கலந்துகொண்டு வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்களில் உள்ள 866 ஊராட்சிகளுக்கு 1,406 எண்ணிக்கையிலான 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' தொகுப்புகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகிறேன். மேலும், இங்கே 6 ஆயிரத்து 800 பயனாளர்களுக்கு 131 கோடி ரூபாய் மதிப்பில் நலத்திட்டங்களை இன்று இந்த மேடையில் வழங்க இருக்கிறோம்.

### பெருமையாக இருக்கிறது!

இதுவரை 31 மாவட்டங்களுக்கு 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த நிகழ்ச்சி இங்கே சீரும், சிறப்புமாக நடைபெறுகிறது. இன்றைக்கு விளையாட்டு பற்றிய ஒரு புரிதல் மக்களிடம் அதிகரித்து இருக்கிறது. அதைப் பார்க்கும் போது விளையாட்டுத் துறையின் அமைச்சராக எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது.

பெற்றோர்களின் இந்தப் புரிதலுக்குக் காரணம், நம் திராவிட மாடல் அரசின் செயல்பாடுகள். குறிப்பாக, சர்வதேசப் போட்டிகள் பலவற்றை தமிழ்நாட்டில் தொடர்ந்து நடத்திகொண்டு வருவது, இதற்கு முக்கிய காரணம்.

நாம் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை இரண்டு வருடத்திற்கு முன்பு சென்னையில் நடத்தி முடித்தபோது, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் ஃப்ரான்சிஸ்கோ வல்லேஜோ போன்ஸ் (Francisco Vallejo Pons), ட்விட்டரில் ஒரு பதிவு போட்டார்.

"இதுவரை 9 செஸ் ஒலிம்பியாட்களில் பங்கேற்று இருக்கிறேன். ஆனால், இது போன்ற ஒரு சிறந்த விளையாட்டு அரங்கத்தை உலகில் நான் எங்குமே பார்த்ததில்லை. ஏற்பாடுகள் எல்லாம் அவ்வளவு சிறப்பாகச் செய்துள்ளார்கள்" என்று பதிவு போட்டுள்ளார்.

இந்த செஸ் ஒலிம்பியாட்டை நடத்துவதற்கு, பொதுவாக பார்த்தீர்கள் என்றால், 4 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிவிடுவார்கள் எங்கு நடக்கிறது என்று. 4 வருடம் அதற்கான முன்னேற்பாடுகள் நடக்கும். ஆனால், நம் சென்னையில் நான்கு வருடத்திற்கான ஏற்பாடுகளை நான்கே மாதத்தில் செய்து முடித்து, வெற்றிகரமாக `செஸ் ஒலிம்பியாட் போட்டி'யை நடத்தினோம்.

அதுமட்டுல்ல, 'உலக ஸ்குவாஷ் போட்டி', `சர்வதேச சர்ஃபிங் லீக்', `ஏ.டி.பி. டென்னிஸ் போட்டி', `ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி', `ஃபார்முலா 4 கார் பந்தயம்', `சர்வதேச பீச் வாலிபால் போட்டிகள்' என்று பல போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டதால்தான் இன்றைக்கு விளையாட்டின் முக்கியத்துவம் மக்களிடம் போய் சேர்ந்து இருக்கிறது.

### தமிழ்நாட்டுக்கு விருது!

விளையாட்டின் தலைநகராக இன்றைக்கு தமிழ்நாடு உருவாகி வருகிறது. விளையாட்டுத் துறையின் பொற்காலம் கழக ஆட்சி. விளையாட்டுத்துறையில் நம் அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்குப் பல்வேறு திசைகளிலிருந்து தொடர்ந்து பாராட்டுகள் குவிகின்றன. சென்ற வாரம் கூட புதுடில்லியில் நடந்த `பிக்கி இந்தியா ஸ்போர்ட்ஸ் அவார்டு2024'ல் (FICCI India Sports Award2024) தமிழ்நாட்டுக்கு `பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்', அதாவது விளையாட்டுக்கு ஊக்கம் கொடுக்கின்ற சிறந்த மாநிலம் என்று தமிழ்நாட்டுக்கு விருது கொடுத்து இருக்கிறார்கள்.

நகரங்களைக் கடந்து, கிராமங்களில் இருந்தும் பல விளையாட்டு வீரர், வீராங்கனையர்கள் உருவாகி, சர்வதேச போட்டிக் களத்திற்குச் செல்ல வேண்டும். அதற்க்காகத்தான் இந்த 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு ஒவ்வொரு ஊராட்சிகளுக்கும் வழங்குகிறோம்.

வேலூர் மாவட்டத்தில் ஏராளமான வீரர் வீராங்கனையர் உருவாகி இருக்கிறார்கள். சமீபத்தில், நடந்த `பாரீஸ் பாரா ஒலிம்பிக்'கில் பாரா பேட்மிட்டன் போட்டியில் எஸ்.எச்6 (SH6) பிரிவில் நாட்டிற்காக பதக்கம் வாங்கித் தந்த தங்கை நித்யஶ்ரீ சுமதி சிவன் அவர்களைத் தந்த மண் இந்த வேலூர் மண்.

### 15 தங்கப் பதக்கங்கள்!

2021இல் பஹ்ரைனில் நடந்த `ஏசியன் யூத் பாரா போட்டி'யில் தங்கம் மற்றும் வெள்ளி, 2022இல் நடந்த `ஸ்பானிஷ் பாரா பேட்மிட்டன்' மற்றும் தாய்லாந்து பாரா பேட்மிட்டன் போட்டிகளில் தங்கம் என மொத்தம் 15 தங்கப் பதக்கங்கள், 11 வெள்ளிப் பதக்கங்கள், 20 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார் தங்கை நித்யஶ்ரீ சுமதி சிவன்.

தமிழ்நாட்டுக்கே நீங்கள் பெருமை தேடித் தந்து இருக்கிறீர்கள். நம் அனைவரின் சார்பாக, அவருக்கு நம் வாழ்த்துகளை அவர்களின் பயிற்சியாளருக்கும் தெரிவித்துக் கொள்வோம்.

### எதுவும் தடையில்லை!

சாதிக்க எதுவும் தடையில்லை என்பதற்கு, மிகச்சிறந்த உதாரணம் இங்கு உட்கார்ந்து இருக்கின்ற தங்கை நித்யஶ்ரீ அவர்கள். நித்யஶ்ரீ மாதிரி பல சிரமங்களுடன் சர்வதேசப் போட்டிக் களத்தில் நுழையும் பிள்ளைகளுக்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்று துவக்கப்பட்டதுதான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை.

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த தேசிய கைப்பந்து வீரர் தம்பி யாசின் இங்கே வருகை தந்துள்ளார். கடந்த செப்டம்பர் மாதம் ஜோர்டான் நாட்டில் நடைபெற்ற 10வது `ஏசியன் மென்ஸ் யூத் கேண்ட் பால் சாம்பியன்சிப்' பட்டதைப் பெற்று நம் நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்துள்ளவர்தான் தம்பி யாசின் அவர்கள்.

### உயரிய ஊக்கத் தொகை!

நித்யஶ்ரீ, யாசின் இருவருக்கும் நாம் அனைவரும் நம் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வோம். தமிழ்நாடு அரசு சார்பில், விளையாட்டில் சாதிப்பவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை கொடுக்கிறோம். அதைத் தவிர, அரசுப் பணியில் 3 சதவிகித இடஒதுக்கீடும் நாம் தர இருக்கிறோம். கலைஞர் கிட்டை வைத்துப் பயிற்சி செய்து தேசிய, சர்வதேசப் போட்டிகள் வரைக்கும் கிராமப்புறப் பிள்ளைகள் நுழையப் போகிறார்கள். அவர்களை கைத்தூக்கி விட, ஒவ்வொரு இடத்திலும் நம் முதலமைச்சர் அவர்களும், நம் அரசும் என்றைக்கும் துணை நிற்கும்.

### மகளிருக்கான ஆட்சி!

தமிழ்நாட்டில் நடைபெறும் ஆட்சி, யாருக்கான ஆட்சி என்று கேட்டால், எல்லோரும் உடனடியாகச் சொல்வார்கள் இது மகளிருக்கான, தாய்மார்களுக்கான ஆட்சி என்று. அந்த அளவுக்கு மகளிர் நலன் காக்கும் திட்டங்கள் திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் செயல்படுத்தப்பட்டுள்ளது. மகளிரின் பொருளாதார சுதந்திரத்தை உறுதிசெய்ய வேண்டும் என்பதற்காகதான் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்குக் கோடிக்கணக்கில் கடன் உதவிகளை வழங்கி வருகிறோம். உங்களைப் போல் நாங்கள் சமூகத்தில், பொருளாதாரத்தில், அரசியல் பங்கெடுப்பில் வலிமைப்படுத்துவதற்காகத்தான் நீங்கள் அனைவரும் இந்த ஆட்சியின் பக்கம் என்றைக்கும் நின்றுகொண்டு இருக்கிறீர்கள்.

திராவிட மாடல் அரசு உங்களை மென்மேலும் உயர்த்தும் என்ற உறுதியை இங்கு நான் உங்களுக்குத் தருகிறேன். அதற்கு உதாரணமாகதான் இங்கு 8 கோடி அளவுக்குக் கடன் இணைப்பும், 38 கோடி அளவுக்குச் சமுதாய முதலீட்டு நிதியும் தர இருக்கிறோம்.

### மாற்றுத்திறனாளிகளின் உற்றத்தோழன்!

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் வகையில், தமிழக அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணமில்லாப் பேருந்து பயண வசதியை இந்த அரசுதான் ஏற்படுத்திக் தந்தது. மாற்றுத்திறனாளிகளின் உற்றத்தோழனாக அவர்களை தாங்கும் அரணாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார். அதனால்தான் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தன் நேரடி கண்காணிப்பில் முதலமைச்சர் வைத்து இருக்கிறார். அதன் அடிப்படையில், இன்றைக்கு, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 170 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை நாம் இங்கு வழங்கி இருக்கிறோம்.

உங்கள் கோரிக்கையின் முக்கியத்துவம் உணர்ந்து, நீங்கள் எப்போது மனு கொடுத்தாலும் அதை அப்போதே கவனத்துடன் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்கிறார், நம் முதலமைச்சர் அவர்கள். பட்டா, வீட்டிற்கான ஆணை, கல்வி உதவித்தொகை, ஸ்போர்ட்ஸ் கிட், தொழில்தொடங்க மானியம் என்று யார், யாருக்கு என்ன தேவையோ, அதை பார்த்துப் பார்த்து செய்துகொண்டு இருக்கிறார், நம் முதலமைச்சர் அவர்கள். இன்றைக்கு இந்த ஆட்சியின் அடையாளமாக உங்களின் மகிழ்ச்சியை நாங்கள் பாக்கிறோம்.

### வீடு கட்டுவதற்கான ஆணைகள்!

இருக்க இடம் என்பது ஒவ்வொருவரின் உரிமை. அந்த உரிமையை நிலைநாட்டுகின்ற விதமாக இங்கு 2 ஆயிரத்து 800 பேருக்கு பட்டா கொடுக்கப்பட இருக்கிறது. ஏழை நடுத்தர வர்க்கத்தினரின் வீடு வேண்டும் என்ற கனவை நனவாக்க `கலைஞர் கனவு இல்லம் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. இன்றைக்கு, இந்த மேடையில் 200 பேருக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட இருக்கின்றன.

மகளிரின் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்திட, ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்ததும் அவர் இட்ட முதல் கையெழுத்தே மகளிருக்கான விடியல் பயணம் திட்டம் தான். அதன் கீழ், இந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டும் சுமார் 580 கோடிப் பயணங்களை பெண்கள் கட்டணமில்லாமல் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், உயர் கல்வி படிக்கும் சுமார் 4 லட்சம் மாணவிகளுக்கு, மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. தமிழ்ப்புதல்வன் திட்டம் மூலம், 3 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கும் மாதம் 1,000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இதுமட்டுமல்ல, இல்லத்தரசிகள் காலையில் எழுந்து பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளுக்குச் சமைத்துக் கொடுக்க சிரமப்படக் கூடாது என்று, முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இன்றைக்கு அந்த திட்டத்தின் வாயிலாக, ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள்.

### மகளிருக்கு மாதம் 1000 ரூபாய்!

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு திட்டம். இந்தியாவே திரும்பி பார்க்கின்ற வகையில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தை செயல்படுத்தி இருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். இந்த திட்டம் வாயிலாக சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இன்றுவரை மாதந்தோறும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் 1000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை சென்றுக்கொண்டு இருக்கிறது. இப்படி இங்கே யாருக்கு என்ன தேவை என்று பார்த்துப் பார்த்து நம்முடைய அரசுத் திட்டங்களைத் தந்துகொண்டு இருக்கிறது.

இங்கே மகளிர் சுய உதவிக்கடன்களைப் பெற்றுள்ள மகளிருக்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை நம் முதலமைச்சர் அவர்கள் கடன்தொகையாகப் பார்க்கவில்லை, உங்கள் உழைப்பின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைத் தொகையாகத்தான் பார்க்கிறார். ஆகவே, அந்தத் தொகையைக் கொண்டு வாழ்க்கையில், நீங்கள் மேலும் மேலும் உயருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' பெற்றுள்ள அத்தனை இளைஞர்களும், நாளை இந்தியாவிலேயே சிறந்த விளையாட்டு வீரர்களாக வருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### கோரிக்கைகள்!

இங்கு நம் நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு கோரிக்கைகள் வைத்து இருந்தார்கள். ஒன்று இந்த விளையாட்டுத் திடலுக்கும் சுற்றுசுவர் அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். விரைவில், அதை நிச்சயமாக செயல்படுத்துவோம். அதேபோல் இங்கு சின்தெட்டிக் டிராக் கேட்டுள்ளார்கள். அதை நான் முதலமைச்சருடன் பேசி, அதற்கு சாத்தியமா என்று முடிவு செய்துவிட்டு, அதையும் விரைவில் செய்து கொடுப்போம் என்று கூறிக்கொண்டு, இங்கே நலத்திட்ட உதவிகளைப் பெற்றுக்கொண்ட உங்கள் அத்தனைபேருக்கும் என் அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் எ.பி.நந்தகுமார், ஓசூர் பிரகாஷ், கார்த்திகேயன், ஜி.கே.மணி, வெங்கடேசன், மருவூர் மதியழகன், ஈஸ்வரப்பன், அமுலுவிஜயன், வில்வநாதன், கணேஷ், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மணி, கோபிநாத், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சுப்புலட்சுமி ஐ.ஏ.எஸ்., சராயு ஐ.ஏ.எஸ்., சாந்தி ஐ.ஏ.எஸ்., லட்சுமிபிரியா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் பாபு, பாரா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பேட்மிட்டன் வீராங்கனை நித்தியஶ்ரீ சுமதி சிவன், கைபந்து வீரர் யாசின், மாநகராட்சித் துணை மேயர் சுனில்குமார், அரசு அதிகாரிகள் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2024) வேலூர் மாவட்டத்தில் ரூ.75.95 கோடி மதிப்பிலான 17 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ. 14.28 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 36 திட்ட பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, 247 ஊராட்சிகளுக்கு 345 கலைஞர் விளையாட்டு உபகரணங்களின் தொகுப்புகளை வழங்கி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 4,844 பயனாளிகளுக்கு ரூ. 128.92 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி அமுலுவிஜயன், ஜே.எல்.ஈஸ்வரப்பன், அ.செ.வில்வநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு.பாபு, துணை மேயர் மா.சுனில் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி த. மாலதி மற்றும் அரசு அலுவலர்கள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.

---

## ஆற்றல்மிக்க தலைவர் – முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாடு அரசு

# துறைமுகங்கள் - கடல்சார் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உறுதி பூண்டுள்ளது!

## எண்ணூர் – காமராஜர் துறைமுகத்தின் வெள்ளி விழாக் கூட்டத்தில் பொதுப்பணிகள் – சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வாழ்த்துரை!

சென்னை, டிச.9-

ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் தலைமையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு விருந்தினராக பங்கு பெற்ற எண்ணூர் காமராஜர் துறைமுகத்தின் வெள்ளிவிழா கூட்டம் நேற்று முன்தினம் (7.12.2024) சென்னை லீலா பேலஸ் அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவில் பங்குபெற்ற ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவனத் தலைவர் சுனில் பாலிவால், காமராஜர் துறைமுக நிறுவன துணை தலைவர் ஜி.விஸ்வநாதன், காமராஜர் துறைமுக நிறுவன மேலாண் இயக்குநர் திருமதி ஜெ.பி. ஐரின் சிந்தியா, திரைப்பட நடிகை ஆண்ட்ரியா ஜெரெமையா, ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பள்ளிக்கல் மற்றும் ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் அனைவரையும் வரவேற்று தனது உரையைத் தொடங்கினார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றுகையில், எண்ணூர் காமராஜர் துறைமுகத்தின் வெள்ளிவிழாவில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்து, அக்டோபர் 1999இல், எண்ணூர் துறைமுகம் அதாவது காமராஜர் துறைமுகம் இந்தியாவின் 12வது பெரிய துறைமுகமாக அறிவிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டார்.

பெரிய துறைமுகமாகிய சென்னை துறைமுகத்தின் நெரிசலைக் குறைக்கவும், சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், நமது மதிப்பிற்குரிய தலைவர் அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஒன்றிய அரசை வலியுறுத்தி சென்னையின் வடக்கே துறைமுக வளர்ச்சிக்கு தேவையான நிலம் தமிழக அரசால் கையகப்படுத்தப்பட்டு துறைமுகத்திடம் ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு மற்றும் அப்போதைய மத்திய அமைச்சர்கள் முரசொலிமாறன் மற்றும் டி.ஆர்.பாலு ஆகியோரின் தொடர்ச்சியான ஆதரவுடன், துறைமுகம் 2001 ஆண்டு பிப்ரவரி1 அன்று செயல்படத் தொடங்கி, அப்போதைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்தத் துறைமுகம் கடந்த 25 ஆண்டுகளாக சாலை, இரயில் இணைப்புகளுடன் மாநில அரசின் ஆதரவுடன் அதன் செயல்பாடுகள் வெற்றிகரமாக இருப்பதைக் குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள், இத்துறைமுகம் பொன்விழா கொண்டாடும் வகையில் வளர்ச்சி பெறும் என்பதில் சந்தேகம் இல்லை எனத் தெரிவித்தார்.

இந்த துறைமுகம் அமைந்துள்ள காட்டுப்பள்ளி முதல், கல்கத்தா சாலை, பெங்களூர் சாலை, திருச்சி சாலை கடந்து மாமல்லபுரம் வரை அதாவது, கிழக்கு கடற்கரை சாலையை இணைக்கும் வகையில் சென்னை வெளிவட்ட எல்லைச் சாலை (CPRR) அமைக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

134 கி.மீ. நீளத்தில் ரூ.16,212 கோடி மதிப்பீட்டில் சாலை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியை முதலமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்தி விரைவாக முடிக்க அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

இச்சாலை பணிகள் முடிவுற்றவுடன், இத்துறைமுகம் தமிழகத்தின் பிற பகுதிகள் மற்றும் அண்டை மாநிலங்களுடன் கூடுதல் இணைப்பைப் பெற்று வெற்றிகரமாகச் செயல்படும்.

2023-2024 ஆம் ஆண்டில் சுமார் 45 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை கையாண்ட காமராஜர் துறைமுகத்தின் அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களைப் பாராட்டிய அமைச்சர் அவர்கள், ஆற்றல் மிக்க தலைவர், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு அரசு, துறைமுகங்கள் மற்றும் கடல்சார் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உறுதிபூண்டுள்ளது என்றும், எண்ணூர் காமராஜர் துறைமுகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதாக தெரிவித்தார்.

மேலும், இந்த மிக முக்கியமான நிகழ்ச்சிக்கு அழைத்ததற்காக மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தனிமரம் தோப்பாகாது, அனைத்து மரங்களும் ஒன்று சேர்ந்தால்தான் தோப்பாகும் இதைப் போல இத்துறைமுக வளர்ச்சிக்குப் பாடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது பழமொழி, இதற்கேற்ப இத்துறைமுக வளர்ச்சி பெற்று இருந்தால் தான் பலநாடுகளுக்கும் சென்று பொருள் ஈட்ட முடியும் என்பதைக் குறிப்பிட்டு, இத்துறைமுகம் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் எனத் தெரிவித்தார்.

கடந்த 25 ஆண்டுகளாகவும், எதிர்காலத்திலும் இந்தத் துறைமுகம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்காக பாடுபட்ட ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவன தலைவர், காமராஜர் துறைமுக நிறுவன மேலாண் இயக்குநர், காமராஜர் துறைமுக நிறுவன துணை தலைவர் மற்றும் ஒட்டுமொத்த குழுவையும் வாழ்த்தி உரையை நிறைவு செய்தார்.




சென்னை ஹோட்டல் லீலா பேலஸ்சில் நேற்று முன்தினம் (7.12.2024) நடைபெற்ற எண்ணூர் காமராஜர் துறைமுகத்தின் வெள்ளி விழாவில் ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் 'துறைமுகங்களின் முன்னோடி' என்ற விழா மலரை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவனத் தலைவர் சுனில் பாலிவால், காமராஜர் துறைமுக நிறுவன துணை தலைவர் ஜி.விஸ்வநாதன், காமராஜர் துறைமுக நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திருமதி ஜே.பி. ஐரின் சிந்தியா, திரைப்பட நடிகை ஆண்ட்ரியா ஜெரெமையா, ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிகல், ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.